# வெளிநாட்டிலிருந்து வந்த மக்களுக்கான சமூகப் பணி சேவைகளுக்கான தனியுரிமை அறிவிப்பு

## 1. இந்தத் தகவலை நான் ஏன் தெரிந்துகொள்ள வேண்டும்?

புலம்பெயர்ந்தவர், அகதி அல்லது வெளிநாட்டிலிருந்து யு.கே.-க்கு வந்துள்ள நபர் என்ற முறையில் உங்களுக்கு சேவைகள் வழங்குவதற்கு நார்ஃபோல்க் கவுண்டி கவுன்சில் (கவுண்டி கவுன்சில்) உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துகிறது. 'பயன்பாடு' என்பது உங்களைப் பற்றிய தகவல்களை கவுண்டி கவுன்சில் எவ்வாறு செயல்முறைப்படுத்துகிறது, சேமிக்கிறது மற்றும் பகிர்கிறது என்பதைக் குறிக்கிறது.

## 2. நாங்கள் யார்

கவுண்டி கவுன்சில் என்பது நாங்கள் வைத்திருக்கும் தனிப்பட்ட தகவல்களுக்கான "தரவுக் கட்டுப்பாட்டாளர்" ஆகும். உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எவ்வாறு "செயலாக்கம் செய்கிறோம்" (சேகரிக்கிறோம், வைத்திருக்கிறோம், பயன்படுத்துகிறோம் மற்றும் வெளிப்படுத்துகிறோம்) என்பதைத் தீர்மானிப்பது எங்கள் பொறுப்பாகும் என்பதை இது உணர்த்துகிறது.

கவுண்டி கவுன்சிலின் முகவரி Norfolk County Council, County Hall, Martineau Lane, Norwich NR1 2UA..

கவுண்டி கவுன்சிலின் தரவுப் பாதுகாப்பு அதிகாரி (DPO) ஹெலன் எட்வர்ட்ஸ் ஆவார்.

## 3. இந்தத் தகவல்களை யார் வழங்குகிறார்கள்

கவுண்டி கவுன்சில் இவர்களிடமிருந்து தகவல்களைப் பெறுகிறது:

- உங்களிடமிருந்தும் உங்கள் குடும்பத்திடமிருந்தும்
- உங்கள் சார்பாகச் செயல்படுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது அறிவுறுத்தப்பட்டுள்ள ஒரு நபர்
- பராமரிப்பாளர்கள் மற்றும் தனிப்பட்ட உதவியாளர்கள்
- கவுண்டி கவுன்சிலுக்குள் உள்ள தொடர்புடைய குழுக்கள்
- உள்ளூர் GP-க்கள், மருத்துவமனைகள், மனநலக் குழு, சமூக சுகாதார மற்றும் பராமரிப்பு அறக்கட்டளை, மற்றும் ஆம்புலன்ஸ் சேவைகள் உள்ளிட்ட சுகாதார அமைப்புகள் மற்றும் வழங்குநர்கள்
- பிற நாடுகளில் உள்ள சுகாதார மற்றும் நலவாழ்வு நிறுவனங்கள்
- வீட்டுவசதி ஆணையங்கள் மற்றும் வீட்டுவசதிப் பலன்கள் மற்றும் கவுன்சில் ஆதரவுப் பலன்களை நிர்வகிப்பவர்களாக மாவட்ட கவுன்சில்கள்
- வீட்டுவசதி சங்கங்கள் மற்றும் வீட்டுவசதி ஆதரவு வழங்குபவர்கள்
- பள்ளிகள், 6ஆம் படிவ கல்லூரிகள், உயர்கல்வி கல்லூரிகள் மற்றும் பிற 16 வயதுக்குப் பிந்தைய கல்விச் சேவை வழங்குபவர்களை உள்ளடக்கிய கல்வி வழங்குநர்கள்
- அரசாங்கத் துறைகள் (உ.ம்., வேலை மற்றும் ஓய்வூதியத் துறை, சுகாதாரத் துறை, உள்துறை)

- பொதுப் பாதுகாவலர் அலுவலகம் மற்றும் பாதுகாப்பு நீதிமன்றம் உள்ளிட்ட பிற நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை முகமைகள்
- குடிவரவு ஆலோசகர்கள்
- போதைப்பொருள் தடுப்புக் குழுக்கள்
- காவல்துறை
- நன்னடத்தைச் சேவை
- பராமரிப்பு மற்றும் ஆதரவை வழங்குகின்ற வீட்டுப ் பராமரிப்பு முகமைகள், பராமரிப்பு மையங்கள், நர்சிங் ஹோம்கள் போன்ற நிறுவனங்கள்
- தன்னார்வக் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் (NGOs)
- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையம்

4. **உங்களைப் பற்றிய என்ன தகவல்களை நாங்கள் சேகரிக்கிறோம் மற்றும் பயன்படுத்துகிறோம்?**

உங்களைப் பற்றிய கீழ்க்கண்ட வகையான தரவுகளை கவுண்டி கவுன்சில் பெறக்கூடும்:

- பெயர், பாலினம், முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் பிறந்த தேதி போன்ற உங்களைப் பற்றிய தனிப்பட்ட மற்றும் தொடர்பு விவரங்கள்
- தேசிய காப்பீட்டு எண்
- NHS எண் (பொருத்தமானதாக இருந்தால்), உடல்நலம் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கு இடையில் தகவல்களைப் பகிரும்போது உங்களை தனித்துவமாக அடையாளம் காண இது உதவுகிறது
- குடிவரவு அந்தஸ்து மற்றும் வரலாறு
- நீங்கள் புரிந்துகொள்ளும் மொழிகள் மற்றும் தகவல்தொடர்புத் தேவைகள் பற்றிய விவரங்கள்
- சமூக நலம்பேணல் மதிப்பீடுகள், மனநல மதிப்பீடுகள், மீளாய்வுகள் மற்றும் நலம்பேணல் மற்றும் ஆதரவுத் திட்டங்களை உள்ளடக்கிய சமூக நலம்பேணல் மற்றும் ஆதரவுச் சேவைகள்
- கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வரலாறு உள்ளிட்ட தனிப்பட்ட வரலாறு
- குடும்ப வரலாறு மற்றும் சமூக உறவுகள், இது பொதுவாக நெருங்கிய உறவினர், முகவர், வழக்கறிஞர் போன்ற உறவுமுறைத் தகவல்கள் மற்றும் தேவையான பிற தகவல்களை உள்ளடக்குகிறது
- தங்குமிடம் மற்றும் வீட்டுவசதி சேவைகள்
- நிதி விவரங்கள், தேவைப்பட்டால் இது வருமானம் மற்றும் சொத்தின் உடைமையுரிமை விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.
- கவுண்டி கவுன்சிலுடன் கொண்டுள்ள செயல்தொடர்புகள், இது தேவை கொண்ட குழந்தையாக இருத்தல், வளர்ப்பு மற்றும் குடியிருப்புப் பராமரிப்பு, தத்தெடுப்பு மற்றும் விடுவிப்புப் பராமரிப்பு உள்ளிட்ட கவனிக்கப்படும் குழந்தையாக இருத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது

கவுண்டி கவுன்சில் உங்களைப் பற்றிய பின்வரும் தகவல்களையும் சேகரிக்கிறது:

- இன மற்றும் இனக்குழுத் தோற்றம்
- மதம்அல்லது நம்பிக்கை

- ஏதேனும் இயலாமைகள் மற்றும் மருத்துவ நிலைமைகளை உள்ளடக்கிய உடல்நலத் தரவு மற்றும் நோயறிதல்கள்.

இந்தத் தகவல் பொதுத் தரவு பாதுகாப்பு ஒழுங்குவிதியின் (GDPR) கீழ் "சிறப்பு வகைத் தரவாக" வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளை பொருத்தமானதாகவும் மற்றும் மேலே விளக்கிக் கூறப்பட்டுள்ள நோக்கங்கள் சார்ந்ததாகவும் இருக்கும்போது மட்டுமே நாங்கள் சேகரிக்க முடியும்.

குற்றவியல் தண்டனைகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்களையும் கவுண்டி கவுன்சில் சேகரிக்கிறது.

உங்களுடைய சிறப்பு வகைத் தரவு மற்றும் குற்றவியல் தண்டனைகள் தரவைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புகளையும் GDPR உள்ளடக்குகிறது. கூடுதல் விவரங்களை '<u>சிறப்பு வகைத் தரவு மற்றும் குற்றவியல் தண்டனைகள் தரவுக் கொள்கை</u>' என்ற எங்கள் ஆவணத்தில் நீங்கள் காணலாம், இது GDPR-இன் கொள்கைகள் மற்றும் இந்தத் தகவல்களை வைத்திருத்தல் மற்றும் அழித்தல் ஆகியவற்றுடன் இணங்கிச் செல்வதற்கான எங்கள் நடைமுறைகளை விளக்கிக் கூறுகிறது.

## 5. உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எதற்காகப் பயன்படுத்துவோம்?

கவுண்டி கவுன்சில் உங்கள் தனிப்பட்ட தகவல்களை இவற்றுக்குப் பயன்படுத்துகிறது:

- சேவைகளுக்கான உங்கள் தேவைகள் பற்றித் தீர்மானிக்க சமூகப் பணி மதிப்பீடுகளை மேற்கொள்ள
- உங்களை யு.கே.-வில் மீளக் குடியமர்த்த உதவுவதற்கு, அல்லது உங்கள் சூழ்நிலைக்குத் தீர்வு காண நாங்கள் உங்களுக்கு உதவுகின்ற அதே நேரம் உங்களுக்கு ஆதரவளிக்க அல்லது உங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல வேண்டும் என நீங்கள் முடிவெடுத்தால் அவ்வாறே நீங்கள் திரும்பிச் செல்ல உதவுவதற்கான சமூகப் பணி சேவைகளை வழங்க
- தேசிய குடிவரவு மற்றும் புகலிடச் சட்டம் 2002-இன் அட்டவணை 3-ஆல் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் மனித உரிமைகள் மதிப்பீடுகளை மேற்கொள்ள
- உங்கள் குடிவரவு அந்தஸ்து காரணமாக வழக்கமான நலவாழ்வுப் பலன்களை அல்லது வீடில்லாதோர் உதவி அமைப்பை உங்களால் அணுக முடியாத நிலை இருந்தால், குடும்ப வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கு ஆதரவு வழங்க

கவுண்டி கவுன்சில் இந்தத் தகவல்களை மோசடியைத் தடுக்க, கண்டறிய அல்லது விசாரணை செய்யவும், எங்களது சேவைகளின் தரத்தை மதிப்பிடவும், எங்கள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்தவும் கூட நாங்கள் பயன்படுத்துகிறோம்.

கவுண்டி கவுன்சில் இந்தத் தகவல்களை மேற்கூறியவற்றுக்கு இணக்கமான வேறு வழிகளிலும் பயன்படுத்தலாம். பிரதானமாக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கு சேவைகள் வழங்கும் பிற பொது அமைப்புகளின் பணிகளை ஆதரிப்பது இதில் அடங்கும். கவுண்டி கவுன்சிலின் சேவைகள் பற்றிய கூடுதல்

தகவல்களை இந்த இணையதளத்தில் காணலாம்: https://www.norfolk.gov.uk/children-and-families

## 6. சட்டம் உங்களை எப்படி பாதுகாக்கிறது மற்றும் உங்கள் தகவல்களைச் செயலாக்கம் செய்வதற்கான சட்ட அடிப்படை என்ன?

இந்தத் தகவல் பொது நலனுக்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பணியின் செயல்திறனுக்கு அவசியமானது என்பதால், உங்கள் திட்டவட்டமான ஒப்புதல் இல்லாமலேயே இந்தத் தகவலைச் செயலாக்குவதற்கான சட்டப்பூர்வ காரணங்கள் கவுண்டி கவுன்சிலுக்கு உள்ளன.

இந்தப் பணிகள்

- தேசிய குடிவரவு மற்றும் புகலிடச் சட்டம் 2002-இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சட்டத்தின் அட்டவணை 3 (பத்தி 14)-இன் படி, யு.கே.-இல் சட்டவிரோதமாகத் தங்கியிருப்பவர், அல்லது இருப்பிட மாற்றத்துக்கான வழிகாட்டுதலைக்
  - (a) கடைபிடிக்க மறுத்த தோல்வியுற்ற புகலிடம் கோருவோர் ஆகியோர் பற்றி தனது கவனத்திற்கு வரும்போது
  - (b) அவர் பற்றி உள்ளூர் அதிகாரசபை உள்துறை அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- குழந்தைகள் சட்டம் 1989
- குழந்தைகள் (பராமரிப்பிலிருந்து வெளியேறுவோர்) சட்டம் 2000
- தத்தெடுத்தல் & குழந்தைகள் சட்டம் 2002 மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறை விதிகள்
- குழந்தைகள் சட்டம் 2006
- குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் சட்டம் 2014, மற்றும்
- குழந்தைகள் மற்றும் சமூகப் பணி சட்டம் 2017
- போக்குவரத்துச் சட்டம்1985
- பராமரிப்புச் சட்டம் 2014
- மனநலச் சட்டங்கள் 1983 மற்றும் 2007
- மனத் திறன் சட்டம் 2005
- வீட்டுவசதி மானியங்கள் கட்டுமான மற்றும் மீளுருவாக்கச் சட்டம் 1996
- தேசியம், குடிவரவு மற்றும் புகலிடம் சட்டம் 2002

உண்மையான பொது நலனுக்கான காரணங்களுக்காகவும், மேலே உள்ள பத்தியில் விளக்கிக் கூறப்பட்ட எங்களது பொதுப் பணியை முடிப்பதற்காகவும் தேவைப்படும் இடங்களில் சிறப்பு வகைத் தரவை செயலாக்கம் செய்ய கவுண்டி கவுன்சில் சட்டப்பூர்வமான ஆதாரங்களைக் கொண்டிருக்கிறது.

## *7.* உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் யாருடன் பகிர்ந்துகொள்ளலாம்?

கவுண்டி கவுன்சில் உங்கள் தனிப்பட்ட தகவல்களை இவர்களுடன் பகிர்ந்துகொள்கிறது:

- எங்கள் சேவைகளை உங்களுக்கு வழங்குவதற்காக கவுண்டி கவுன்சிலுக்குள் உள்ள குழுக்கள்
- வீட்டுவசதி ஆணையங்கள் மற்றும் வீட்டுவசதிப் பலன்கள் மற்றும் கவுன்சில் ஆதரவுப் பலன்களை நிர்வகிப்பவர்களாக மாவட்ட கவுன்சில்கள்
- வீட்டுவசதி சங்கங்கள் மற்றும் வீட்டுவசதி ஆதரவு வழங்குபவர்கள்

- தன்னார்வப் பிரிவு
- அரசாங்கத் துறைகள் (உ.ம்., வேலை மற்றும் ஓய்வூதியத் துறை, சுகாதாரத் துறை, உள்துறை)
- உள்ளூர் GP-க்கள், பல் மருத்துவர்கள், மருத்துவமனைகள், மனநல அறக்கட்டளை மற்றும் சமூக உடல்நல மற்றும் பராமரிப்பு அறக்கட்டளை உள்ளிட்ட சுகாதார அமைப்புகள் சேவை வழங்குநர்கள்
- வீட்டுவசதி துறைகள் மற்றும் வீட்டுவசதி ஆதரவு வழங்குபவர்கள்
- இதர  உள்ளூர் கவுன்சில்கள்
- பள்ளிகள், ஆறாம் படிவ கல்லூரிகள், உயர்கல்வி கல்லூரிகள் மற்றும் மற்ற 16 வயதுக்குப் பிந்தைய கல்வி நிறுவனங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய கல்வி வழங்குநர்கள்
- காவல்துறை
- கல்வித் துறை(DfE), தேவைகள் கொண்ட குழந்தைகள் மற்றும் கவனிப்பின் கீழ் உள்ள குழந்தைகள் ஆகியோரைப் பொறுத்தவரை, தேசியக் கொள்கைகளை உருவாக்குவதற்கும், உள்ளூர் அதிகாரசபையில் செயல்திறனை நிர்வகிப்பதற்கும், நிர்வாகம் செய்வதற்கும், நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதற்கும், மற்றும் சிறந்த நடைமுறைகளைக் கண்டறிந்து ஊக்குவிப்பதற்கும் DfE-க்கு உதவியளிக்க வேண்டும்.
- போதைப்பொருள் தடுப்பு முகமைகள்
- வழக்கறிஞர் சேவைகள்
- பொதுப் பாதுகாவலர் அலுவலகம் மற்றும் பாதுகாப்பு நீதிமன்றம் உள்ளிட்ட பிற நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை முகமைகள்
- உபகரணங்களை வழங்குபவர்கள் மற்றும் சப்ளையர்கள்
- அங்கீகரிக்கப்பட்ட கட்டிட ஒப்பந்ததாரர்கள்
- நலம்பேணல் மற்றும் ஆதரவு வழங்குவதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள வீட்டுப் பராமரிப்பு முகமைகள் அல்லது கேர் ஹோம்ஸ் போன்ற நிறுவனங்கள்
- வயதுவந்தோர் பாதுகாப்பு வாரியம்
- NHS மற்றும் பிற சுகாதார முகமைகள்
- நார்ஃபோல்க் குழந்தைகள் பாதுகாப்பு வாரியம்
- சேவைகளை வழங்குகின்ற தன்னார்வ முகமைகள்
- நன்னடத்தை
- இளைஞர் அதிருப்திக் குழு
- பிற பொது ஆணையங்கள்
- தன்னர்வத் துறை கூட்டாளிகள் [உதாரணமாக, லீவே, நியூ ரூட்ஸ், பிரிட்ஜ்+, இங்கிலீஷ்+, ஆக்சஸ், கைரோஸ், அகதிகள் சபை, செஞ்சிலுவை சங்கம், துறைமுக நலவாழ்வு மற்றும் போர்க்கப்பல் சேவைகள்]
- அவசியமாகத் தேவைப்படும் இடங்களில் அயல்நாடுகளின் தூதரகங்கள், துணைத் தூதரகங்கள் மற்றும் அதிகாரிகள்
- பிரீபெய்டு கார்டு வழங்குபவர்கள்
- போக்குவரத்து / சமூக இணைப்பு வழங்குநர்கள்
- தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் (உங்கள் பிரதிநிதியாக)
- நிதியளிக்கும் அமைப்புகள்

கவுண்டி கவுன்சிலுக்கோ அல்லது நேரடியாக உங்களுக்கோ சேவை வழங்குவதற்கு கவுண்டி கவுன்சிலால் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரு மூன்றாம்

தரப்புக்கும் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் கொடுக்கப்படலாம். உதாரணமாக, கவுண்டி கவுன்சிலுக்கு தகவல் தொழில்நுட்பச் சேவை வழங்குகின்ற ஒப்பந்ததாரர்கள். இந்த சேவை வழங்குநர்கள் தரவு செயல்முறைப்படுத்துவோர் எனவும் அழைக்கப்படுகின்றன, மற்றும் இவை உங்கள் தனிப்பட்ட தகவல்களைக் கவனித்துக்கொள்ள GDPR-இன் கீழ் கவுண்டி கவுன்சிலுக்கு சட்ட ரீதியான கடமைப்பொறுப்பைக் கொண்டுள்ளன மற்றும் அந்தச் சேவையை வழங்குவதற்காக மட்டுமே அவை இதைப் பயன்படுத்தும்.

**8. கவுண்டி கவுன்சில் உங்கள் தகவல்களை எவ்வளவு காலம் வைத்திருக்கும்?**

உங்கள் தகவல்களை நாங்கள் எந்த நோக்கத்திற்காகச் சேகரித்தோமோ அது நிறைவேறும் காலம் வரை மட்டுமே கவுண்டி கவுன்சில் உங்கள் தனிப்பட்ட தகவல்களை வைத்திருக்க முடியும், ஏதேனும் சட்ட ரீதியான, கணக்கு வைப்பு மற்றும் அறிக்கையளித்தல் தேவைகளின் நோக்கங்கள் இதில் உள்ளடங்கும்.

சில சூழ்நிலைகளில் கவுண்டி கவுன்சில் உங்கள் தனிப்பட்ட தகவல்களை உங்களுடன் தொடர்புபடுத்த முடியாதவாறு அநாமதேயமாக்கம் செய்யலாம், அப்படி செய்தால் கவுண்டி கவுன்சில் அத்தகைய தகவல்களை உங்களுக்கு எந்த அறிவிப்பும் கொடுக்காமல் பயன்படுத்தலாம்.

மேற்கொண்டு உங்களுக்கு சேவைகள் தேவைப்படாது எனில், கவுண்டி கவுன்சில் தனது தகவல் தக்கவைப்பு விதிகளுக்கு இணங்க உங்கள் தனிப்பட்ட தகவல்களை வைத்திருந்து பத்திரமாக அழிக்கும்.

**9. இந்தத் தகவல் எவ்வாறு சேமிக்கப்படுகிறது.?**

இந்தத் தகவல் லிக்விட் லாஜிக் அடல்ட்ஸ் சிஸ்டம், லிக்விட் லாஜிக் சில்ட்ரன்'ஸ் சிஸ்டம், லிக்விட் லாஜிக் எர்லி ஹெல்ப் சிஸ்டம், NRPF கனெக்ட் தேசிய தரவுத்தளம் ஆகியவற்றில் மின்னணு முறையில் சேகரிக்கப்படுகிறது மற்றும் சில தகவல்கள் ஒரு காகிதக் கோப்பில் பராமரிக்கப்படுகின்றன.

**10. இந்தத் தகவல் பிற நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதா?**

ஐரோப்பிய பொருளாதாரப் பகுதிக்கு வெளியிலுள்ள பிற நாடுகளுக்கு கவுண்டி கவுன்சில் உங்கள் தகவல்களை வழக்கமான அனுப்புவதில்லை, ஆனால் உங்களுக்கு ஒரு சேவை வழங்குவதற்காக அல்லது மற்றவர்களைப் பாதுகாப்பதற்காக அதைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால், இந்தத் தகவல் அனுப்பப்படுவதற்கு முன் பொருத்தமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாங்கள் உறுதிசெய்வோம்.

**11. கவுண்டி கவுன்சில் உங்களைப் பற்றிய தன்னியமாக்கப்பட்ட முடிவுகளை எடுக்கிறதா?**

கவுண்டி கவுன்சில் உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் தன்னியமாக்கப்பட்ட முடிவுகளைப் பயன்படுத்துவதில்லை

**12. மாற்றங்கள் பற்றி எங்களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.**

கவுண்டி கவுன்சில் உங்களைப் பற்றிச் சேகரித்து வைத்திருக்கும் தனிப்பட்ட தகவல்கள் துல்லியமாகவும் புதுப்பிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டியது முக்கியமாகும்.

எங்களுடனான உங்கள் பணி உறவின்போது உங்கள் தனிப்பட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால் தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும். பின்வருவனவற்றைச் செய்வதன் மூலம் இதைச் செய்ய நீங்கள் எங்களுக்கு உதவ முடியும்:

- உங்கள் விவரங்கள் ஏதாவது மாறும்போது உங்கள் சமூகப் பணியாளரிடம் சொல்வது; மற்றும்
- உங்களைப் பற்றிச் சேகரித்து வைத்திருக்கும் தகவல் ஏதாவது தவறாக இருந்தால் உங்கள் சமூகப் பணியாளரிடம் சொல்வது

**13. GDPR-இன் கீழ் உங்கள் உரிமைகள்**

நீங்கள் பின்வரும் உரிமைகளைப் பெற்றிருக்கிறீர்கள் (ஆனால் அவை எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தாது). உங்களுக்கு பின்வருவனவற்றிற்கு உரிமை உள்ளது:

- உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குவது குறித்த தகவலை அறிந்துகொள்ளுதல். அதனால் தான் இந்த ஆவணம் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
- உங்கள் தனிப்பட்ட தகவல்களில் ஏதேனும் பிழை இருந்தால் அதைத் திருத்திக்கொள்ளுதல் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால் அதைப் பூர்த்தி செய்தல்
- உங்கள் தனிப்பட்ட தரவை செயலாக்கம் செய்வதற்கு ஆட்சேபம் தெரிவித்தல்
- உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்கம் செய்யப்படுவதைக் கட்டுப்படுத்துதல்
- உங்கள் தனிப்பட்ட தரவை அழித்தல் ("மறக்கப்படுவதற்கான உரிமை"). இந்த உரிமை பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது, நீங்கள் இதைப் பயன்படுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கும்போது இதைப் பற்றி மேற்கொண்டு உங்களுடன் விவாதிக்கப்படும்
- சில சூழ்நிலைகளில் உங்கள் தனிப்பட்ட தகவல்களை இடமாற்ற, நகல் செய்ய அல்லது அனுப்ப ("தரவு பெயர்வுத்திறன்").
- உங்கள் தனிப்பட்ட தகவல்களையும், கவுண்டி கவுன்சில் அவற்றை எப்படி செயலாக்கம் செய்கிறது என்பதைப் பற்றிய தகவல்களையும் அணுகுவதற்காக கோரிக்கை விடுத்தல்.
- தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குவதற்கு நீங்கள் கொடுத்துள்ள ஒப்புதலை எந்த நேரத்திலும் விலக்கிக்கொள்ளுதல்.

இந்த உரிமைகள் எதையாவது நீங்கள் பயன்படுத்த விரும்பினால், தயவுசெய்து தகவல் இணக்கக் குழுவை பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளவும்:

- மின்னஞ்சல்: information.management@norfolk.gov.uk
- தபால் மூலம்: Information Compliance Team, Norfolk County Council, County Hall, Martineau Lane, Norwich NR1 2UA

## 14. கேள்விகள் அல்லது புகார்கள்

இந்தத் தனியுரிமை அறிக்கை பற்றியோ அல்லது கவுண்டி கவுன்சில் உங்கள் தனிப்பட்ட தகவல்களை எப்படிக் கையாளுகிறது என்பதைப் பற்றியோ உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், நீங்கள் DPO, Norfolk County Council, County Hall, Martineau Lane, Norwich NR1 2DH என்ற முகவரிக்கு எழுதலாம்அல்லது dpo@norfolk.gov.uk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

தரவுப் பாதுகாப்புப் பிரச்சனைகளுக்கான யு.கே. கண்காணிப்பு அதிகாரியாகிய தகவல் ஆணையர் அலுவலகத்தில் (ICO) எந்த நேரத்திலும் புகார் செய்வதற்கான உரிமையையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். ICO-ஐ பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளலாம்:

- ICO, Wycliffe House, Water Lane, Wilmslow, Cheshire SK9 5AF-என்ற முகவரிக்கு தபால் எழுதுவதன் மூலம்
- 0303 123 1113 என்ற எண்ணுக்கு தொலைபேசியில் அழைப்பதன் மூலம்
- இணையதளத்தில் https://ico.org.uk/global/contact-us/

## 15. இந்த தனியுரிமை அறிவிப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள்

வழக்கமான மதிப்பாய்வின் கீழ் கவுண்டி கவுன்சில் இந்த தனியுரிமை அறிவிப்பை வைத்திருக்கிறது மற்றும் உண்மையான புதுப்பிப்புகள் மேற்கொள்ளப்படும்போது ஒரு புதிய தனியுரிமை அறிவிப்பு உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் தனிப்பட்ட தகவல் செயலாக்கம் செய்யப்படுவதைப் பற்றி கவுண்டி கவுன்சில் அவ்வப்போது பிற வழிகளிலும் உங்களுக்கு தகவல் தெரிவிக்கலாம்.

இந்த அறிவிப்பு பிப்ரவரி 2020-இல் கடைசியாக புதுப்பிக்கப்பட்டது.

நீங்கள் இந்த ஆவணத்தை பெரிய அச்செழுத்தில், ஆடியோ, பிரெய்லி வடிவத்தில், மாற்று வடிவத்தில் அல்லது வேறு மொழியில் பெற விரும்பினால், தயவுசெய்து வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 0344 800 8020 அல்லது உரைச்செய்திக்கு: 0344 800 8011, நாங்கள் எங்களால் இயன்ற அளவுக்கு உதவி செய்வோம்.